தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


## **<u>ஆணை நாள். 02.07.2026</u>**

## <u>முன்னிலை</u>

**திரு. வி.பி,ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 16386/A/2023</u>**

திரு. A.பரமசிவம் -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து
துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
மேட்டூர் வட்டம்,
சேலம் மாவட்டம் - 636 401.

## <u>ஆணை</u>

மேற்கண்ட வழக்கு ஏற்கனவே இவ்வாணையத்தில் 05.03.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. பரமசிவம் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. கொ. கார்த்திகேயன், பொதுத் தகவல் அலுவலர்/தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மேட்டூர் அவர்கள் ஆணையத்தின் முன் ஆஜரானார். அன்றைய விசாரணையில் பொது தகவல் அலுவலர் அளித்த தகவலைப் பெற்று சரிபார்க்காமல் மனுதாரர் தனக்கு முழுமையான தகவல் கிடைக்கப் பெறவில்லை என ஆணையத்தில் தெரிவித்ததன் பேரில் மனுதாரரின் வயது மூப்பினைக் கருதி மனுதாரருக்கு மீண்டுமொரு வாய்ப்பளித்து இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (02.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. A.பரமசிவம் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. கொ. கார்த்திகேயன், பொதுத் தகவல் அலுவலர்/தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் 30.05.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கூனாண்டியூர்கிராமம் சர்வே எண்.55/2A 0.21.50 துர்வை 0.53 என்ற எண்ணில் பிழை திருத்தங்கள் செய்ய வேண்டி கடந்த 08.06.2022-ம் தேதி அன்று பதிவு அஞ்சல் தபால் மூலமாக வட்டாட்சியர்

அலுவலகத்தில் அளித்த மனு மீது எடுத்த நடவடிக்கை அதன் விபரம் தொடர்பாக 12 இனங்களில் தகவல் வழங்க கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர்/தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்கள் 15.06.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக அளித்த தகவலில் திருப்தி அடையாத மனுதாரர் 11.07.2023 நாளிட்ட பிரிவு 19(1)-ன் கீழ் முதலாம் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் 31.07.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக அளித்த தகவல் திருப்தி அளிக்காத காரணத்தால் மனுதாரர் 14.09.2023 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 05.03.2026 முற்பகல் இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் கோரிக்கை தொடர்பாக மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் 02.01.2026 அன்று அப்போதைய மற்றும் தற்போதைய மேல்முறையீட்டு அலுவலர்கள் மற்றும் பொது தகவல் அலுவலர்கள், பொட்டனேரி வருவாய் ஆய்வாளர் மற்றும் குறுவட்ட அளவர், பள்ளிப்பட்டி குரூப் கிராம நிர்வாக அலுவலர், மனுதாரர் திரு. பரமசிவம் மற்றும் திருமதி. அம்மாகண்ணு ஆகியோரை விசாரணை மேற்கொண்டு சேலம் மாவட்டம், கூணாண்டியூர் கிராமம், புல எண் 55/2A பரப்பு 0.21.5 தீர்வை 0.53 பட்டா எண்.2-ல் ஏற்கனவே தாக்கலாகியுள்ள ஆஜர் பட்டாதாரர் மனைவி அம்மாகண்ணு என்ற பெயருடன் அய்யாவு மனைவி மாரியம்மாள் என்ற பெயரினை கூட்டாக தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளார். மேலும் அவ்வுத்தரவு மீது இடருற்றோர் அவ்வுத்தரவின் மீது உரிய உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ள தெரிவித்ததாக ஆணையத்தில் தெரிவித்தார்.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரது 6(1) மனுவிற்‘கு 23.06.2026 தேதியிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து அதன் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மனுதாரரின் தாயார் திருமதி. மாரியம்மாள் என்பவர் மேச்சேரி சார் பதிவாளர் ஆவண எண்.518/1967-ன்படி மேற்படி கிராம புல எண்.55/2-ல் 1.24 ஏக்கர் நிலத்தினை குஞ்சுகவுண்டர் வகையறாவிடம் கிரையம் பெற்றுள்ளார். அதன்பின்னிட்டு மாரியம்மாள் வகையறா மேற்படி கிரையம் பெற்ற புல எண்.55/2 ‘நிலத்தில் 0.50 செண்ட் நிலத்தினை திருமதி. அம்மாகண்ணு க/பெ.நடராஜன் என்பவருக்கு மேச்சேரி சார் பதிவாளர் ஆவண எண்.1861/1980-ன் படி விற்பனை செய்துள்ளார் அதன் பின்னிட்டு மாரியம்மாள் என்பவர் தனது ஒரு மகன் திரு. கோவிந்தராசு என்பவருக்கு மேச்சேரி சார்பதிவாளர் ஆவண எண்.878/1993-ன் படி 0.20 செண்ட் நிலத்தினையும் மற்றொரு மகனான மனுதாரர் திரு. பரமசிவம் என்பருக்கு மேச்சேரி சார்பதிவாளர் ஆவண எண்.885/1993-ன்படி 0.50 செண்ட் நிலத்தினையும் தான செட்டில்மெண்ட் செய்துள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும் மேட்டூர் வட்டம் கூனாண்டியூர் கிராமம் புல எண் 55/2A பரப்பு 0.21.5 ஏர்ஸ் துர்வை 0.53 பட்டா எண்2 நடராஜன் மனைவி அம்மாக்கண்ணு என்பவர் பெயரில் நில உடைமை மேம்பாட்டு திட்ட கிராம “அ” பதிவேட்டிலும், கிராம சிட்டாவிலும் தாக்கலாகியுள்ளதாகவும் மேற்படி புல எண்ணில் அனுபவமானது நடராஜன் மனைவி அம்மாக்கண்ணு என்பவரின் அனுபவத்தில் உள்ளதாகவும் ஆணையத்தில் தெரிவித்தார். அதனடிப்படையில் சேலம் மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறைகள் ப.மு.e-4079368/2025/ஜி1, .02.01.2026 நாளிட்ட கடிதத்தில் மேற்படி நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டதாகவும் மேற்படி அதிகபடியாக பட்டா வழங்கப்பட்ட

0.03 செண்ட் நிலத்திற்கு உரிய தொகையினை அய்யாவு (எ) ஐயன் மகன் பரமசிவம் என்பவர் பெற்றுக் கொண்டதாகவும், இவற்றை நடராஜன் மனைவி அம்மாகண்ணு அறியாமையின் காரணமாக சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை என அவ்வுத்தரவில் தெரிவித்து சேலம் மாவட்டம், கூணாண்டியூர் கிராமம், புல எண் 55/2A பரப்பு 0.21.5 தீர்வை 0.53 பட்டா எண்.2-ல் ஏற்கனவே தாக்கலாயியுள்ள ஆஜர் பட்டாதாரர் மனைவி அம்மாகண்ணு என்ற பெயருடன் அய்யாவு மனைவி மாரியம்மாள் என்ற பெயரினை கூட்டாக தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளார். மேலும் இவ்வுத்தரவின் மீது இடருற்றோர் இவ்வுத்தரவின் மீது மனுதாரர் திரு. பரமசிவம் அவர்கள் உரிய உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ள உத்தரவிடப்பட்டதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் கிராம கணக்கில் சர்வே எண்.55/2A-ல் திருமதி. மாரியம்மாள் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் சர்வே எண் 55/2B-ல் அம்மாகண்ணு பெயர் உள்ளதாகவும் ஆணையத்தில் தெரிவித்தார். பட்டா மாறுதல் மட்டும் செய்து கொடுத்ததாகவும் 0.04 செண்ட் நிலத்தை தனித்து மனுதாரரது பெயரில் பட்டா மாற்றம் செய்து கொடுக்க வேண்டுமென கோரினார். மீதமுள்ள 0.04 செண்ட் நிலத்தை பட்டா எண் 274-ல் சேர்க்க வேண்டுமென கோரினார். மேலும் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல் திருப்திகரமாக இல்லையென ஆணையத்தில் தெரிவித்தார். மனுதாரர் தனது கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இவ்வாணையத்திற்கு இதே பொருண்மை கொண்ட 10 மனுக்களைத் தாக்கல் செய்துள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரரிடம் அவரது 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்களுக்கு பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவலில் எந்தெந்த இனங்களுக்கு தகவல் திருப்திகரமானதாக இல்லையென ஆணையத்தின் தரப்பில் கேட்டபோது மனுதாரர் இனம்வாரியாக குறிப்பிட்டு சொல்ல மறுக்கிறார். திருமதி. மாரியம்மாள் அவர்களுக்கு இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர். அவர்களில் திரு. பரமசிவம் என்பவர் திருமதி மாரியம்மாள் என்பவரின் அவரும் ஒரு வாரிசுதாரர். அவர் ஒரேயொரு வாரிசதாரர் அல்ல. மனுதாரர் தனது கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் ஒரே பொருண்மை கொண்ட 10 மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு நீதி வழங்கும் நோக்கத்தில் மேற்கொண்ட மறுவிசாரணையில் சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் விசாரணை மேற்கொண்டு தீர்வு அளித்த பின்னரும் தெளிவுறாது பொது தகவல் அலுவலரின பணிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலும் ஆணையத்தின் நேரத்தை வீணடிக்கும் வகையில் செயல்படும் மனுதாரர் மீண்டும் இதே பொருண்மையுள்ள மனுக்களை தாக்கல் செய்கிறார். தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 2(F)-ன் படி பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரர் தொடர்பான உரிய மனுக்களுக்கு அலுவலகத்தின் பதிவுகளிலுள்ள தகவல்கள் மட்டுமே தகவல்களாக வழங்க இயலும். ஆகையால் சேலம் மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறைகளின் படி மனுதாரர் தனது கோரிக்கைகளை உரிய உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தி, பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆணையத்தின் ஆணைக்கிணங்க கோப்புகளின் அடிப்படையில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 2(F)இன் படி வழங்கப்பட்டுள்ளது என இவ்வாணையம் உறுதி செய்து இனிவரும் காலங்களில் மனுதாரர் தனது

கோரிக்கைகளை செயல்படுத்தும் விதமாக ஆணையத்தை கட்டாயப்படுத்தும் பட்சத்தில் அம்மனுக்கள் இவ்வாணையத்தால் தள்ளுபடி செய்யப்படும் என அறிவுறுத்தி இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (வி.பி,ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 16386/A/2023**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மேட்டூர் வட்டம்,
சேலம் மாவட்டம் - 636 401.

**மனுதாரர்**
திரு. A.பரமசிவம்
235, கீழ்தெரு,
கூனான்டியூர் கிராமம் (ம) அஞ்சல்,
மேட்டூர் வட்டம்,
சேலம் - 636458

RA/PC 06.07.2026